<u>சி.சி.44/2018</u> <u>நாள்: 03.03.2021</u>

<u>அ.சா.3, தனசேகரன், வயது 54, த.பெ.கோவிந்தன், போச்சம்பள்ளி.</u>

<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் நடத்துனராக பணிபுரிகிறேன். அ.சா.1 என் மாமியார் ஆவார். இறந்து போன கோடிஸ்வரன் என் மாமனார் ஆவார். கடந்த 04.02.2018ம் தேதி மாலை 5 மணியளவில் நான் போச்சம்பள்ளியிலிருந்த போது என் மச்சான் கலைச்செல்வன் போன் செய்து அருணபதி கூட்டுரோடு அருகே என் மாமனார் மற்றும் மாமியார் இருசக்கர வாகனத்தில் என் மாமனார் ஓட்டி செல்ல பின்னால் என் மாமியார் உட்கார்ந்து சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த ஈச்சர் லாரி அவர்கள் வாகனத்தின் மீது வேகமாக வந்து மோதிவிட்டதாக தகவல் சொன்னார்கள். நான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு வந்து அவரை பார்த்தேன். அப்போது என் மாமனார் இறந்துவிட்டார். என் மாமியாருக்கு வலது மற்றும் இடது கை, நெற்றி ஆகிய இடங்களிலும் அடிபட்டிருந்தது. இடுப்பு பகுதியில் அடிபட்டிருந்தது. பின் மேல்சிகிச்சைக்காக பெங்களூர் ஜான்சன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இதுசம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை சரவணன் என்பவர் ஓட்டிவந்ததாக சொன்னார்கள்.

<u>குறுக்கு விசாரணை:</u>

எதிரிக்கு வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**ஒம்./ திரு.பா.திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**ஊத்தங்கரை.**